# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கம் (கூட்டிணைத்தல்)

**கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் அவர்களால் 2024, யூன் மாதம் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, யூன் மாதம் 06 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **267 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

"கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கம்" என அழைக்கப்பட்டு அறியப்படும் சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தின் குறிக்கோள்களையும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இலங்கையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எக்குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

***1.*** இச்சட்டம், *2024* ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்

***2.*** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தின் உறுப்பினர்களாக இப்போதுள்ளவர்களும் இத்தால் அமைத்துரு வாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்களுமான அத்தகையோரான அத்தகைய ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டிணைக்கப்பட்ட குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கம்" என்ற பெயர்மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பெயரைக்கொண்டு வழக்குத் தொடுக்கலாம், அவர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கவும்

படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும், விரும்பியாங்கு அதனை மாற்றுவதற்கும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்*

**3.** *(1)* கூட்டிணைக்கப்பட்டகுழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தொடர்பாடல் மற்றும் செயல்நிறைவேற்றத் திறன்களில் தகைமையும் அனுபவமும் கொண்டுள்ள பரீட்சகர்கள் குழாமொன்றை ஆட்சேர்த்தலும், பயிற்றுவித்தலும், பேணுதலும், பேச்சு, நாடகம், செய்யுள், உரை, பகிரங்க உரையாற்றுகை, பேச்சிலான மற்றும் எழுத்திலான ஆங்கிலம், தனிப்பட்ட மற்றும் உயர் தொழில்சார் ஆங்கிலம் என்பவற்றில் பரீட்சைகளை நடாத்துதலும் பரீட்சைகளை நடாத்துவதன் மூலமும் சான்றிதழ்களை அளித்தலும்;

(ஆ) (i) பரீட்சார்த்திகளின் தேவைகளைப் பிரதிபலிக்கின்ற வாய்மொழித் தொடர்பாடல் மற்றும் அரங்காட்டுக் கலைகளின் பரந்தளவிலான துறைகளில் பாடவிதானங்களைத் தயாரித்தல்;

(ii) பயிற்சியின் மாற்றமடைகின்ற பாங்குகளுக்கும் பரீட்சகர்கள், ஆசிரியர்கள் மற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்தான கருத்துரைகளுக்கும் பதிலிறுத்தி இப்பாடவிதானங்களைத் தொடர்ச்சியான பரிசீலனையின்கீழ் வைத்திருத்தல்;

(iii) பாடவிதானங்களில் குறிப்பிடப்பட்டவாறு நியாயமான பரீட்சைகளை நடாத்துதல்;

(iv) இயைபான தனியாட்களுக்கும் பரீட்சை நிலையங்களுக்கும் அத்தகைய பரீட்சைகள்பற்றி நியாயமான அறிவித்தல் கொடுத்தல்; அத்துடன்

(v) அததியாவசியமான சரிபார்த்தல் நடவடிக்கை முறைகளை இடர்பாக்கும் அதேவேளையில் இயன்றளவு முற்கூட்டியே முடிவுகளைச் சேரித்தலும் பகிர்ந்தளித்தலும்;

(இ) தரப்பரீட்சைகளை ஆசிரியர்களுக்கான வழிகாட்டுநெறியொன்றாகப் பயன்படுத்துவதனை இயலச்செய்து, மாணவர்களின் கற்கைநெறிகளின் பாகமாகவமையும் பாடவிதானங்களினுள்ளான பாடங்களைத் தெரிவு செய்தல்;

(ஈ) தோதான தர மற்றும் திப்புளோமாப் பரீட்சைகளைப் பல்வேறுபட்ட பாடங்களில் எடுப்பதற்கு மாணவர்களை ஊக்குவித்தல்; அதன் மூலம் அவர்களின் திறன்களை அவர்களின் ஆற்றலினது அதியுச்ச மட்டத்துக்குப் பரந்ததாக்குதலும் அபிவிருத்தி செய்தலும்;

(உ) ஆங்கிலம், பேச்சு, நாடகம் மற்றும் இணைந்த பாடங்களின் ஆசிரியர்களிடையே தோழமை மற்றும் புரிந்துணர்வு பற்றிய கூடுதல் நெருங்கிய பிணைப்பை வளர்த்தலும் ஊக்குவித்தலும்;

(ஊ) ஆங்கிலம், நாடகம் மற்றும் இணைந்த பாடங்களில் கிரமமான ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் செயலமர்வுகளையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல்;

(எ) தனிப்பட்ட மற்றும் உயர்தொழில்சார் தொடர்பாடல் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக விசேடித்த ஆங்கிலக் கற்கைநெறிகளை நடாத்துதல்; அத்துடன்

(ஏ) வாய்மொழித் தொடர்பாடல் மற்றும் நாடகக் கலை தொடர்பான கருமங்களில், அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படின், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கருத்தை நிச்சயிக்கும் வாய்ப்பை அரசாங்கத்துக்கு, உயர் தொழில்சார் மற்றும் கல்விசார் குழுக்களுக்கு மற்றும் வேறு அக்கறை கொண்டுள்ள ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கு வழங்குதல்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில், கூட்டிணைக்கப்பட்ட குழு, அத்தகைய நடைமுறைப்படுத்துகை, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய வேறு ஏதுவின் அடிப்படையிலான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத் தினது பணியுடன் முரண்பாடெதுவும் இராதிருப்பதனைக் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப் படுத்துதல்

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் சமகாலத்தில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஏதேனும் பணிக்குமிடையே முரண்பாட்டை உருவாக்காத வகையிலான அத்தகையவொரு முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டிணைக் கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களினது முகாமையும் நிருவாகமும் பேரவை யொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தலைவர்;

(ஆ) துணைத்தலைவர்;

(இ) கௌரவப் பொதுச் செயலாளர்;

(ஈ) கௌரவ உதவிச் செயலாளர்;

(உ) கௌரவப் பொருளாளர்;

(ஊ) கௌரவ உதவிப் பொருளாளர்;

(எ) தவிசாளர் - பரீட்சைகள் சபை;

(ஏ) பரீட்சைகள் சபையின் கௌரவச் செயலாளர்;

(ஐ) இரு தாபனப் பணிப்பாளர்களும்;

(ஒ) 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட அத்தகைய வேறெவரேனும் உறுப்பினர்.

(3) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவி வகிக்கின்ற கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தின் பேரவையுறுப்பினர்கள், 7 ஆம்

பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது பேரவை நியமிக்கப்படும்வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலக் குழுவொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகம் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையுறுப்பினர்களின் தேர்தல் அல்லது நியமனம் தொடர்பான விதிகளை ஆக்குவதற்கு இடைக்காலக்குழு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(இ) இடைக்காலக் குழுக் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஆறு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(ஈ) இடைக்காலக் குழுவின் ஏதேனும் முடிபு, ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் அதன் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவை, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டினுள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(4) (அ) பேரவையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் ஆண்டுப் பொதுக்கூட்டத் திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்காக நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், சொல்லப்பட்ட ஓராண்டுக் காலப்பகுதி கழிந்தபின்னர் மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், பேரவையின் தலைவர், துணைத் தலைவர், பொருளாளர், உதவிப் பொருளாளர் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட உறுப்பினர்கள், தொடர்ச்சியான மூன்று காலப்பகுதிகளுக்கு மேற்பட அத்தகைய பதவியை வகித்தலாகாது.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகுகை, இயலாமை அல்லது பதவி அகற்றுகை காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், பேரவை, கூட்டிணைக்கப்பட்ட

குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்காக மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்கள்

**6.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச்செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:–

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினது அக்கறைகளைப் பாதிக்கின்ற கருமங்கள் மீது செயலாற்றுதல்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினது பொது நடத்தையில் உயர் தொழில்சார் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதலும் உயர் தரங்கள் பேணப்படுவதனை உறுதிப்படுத்துதலும்;

(இ) விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டுள்ள பரீட்சைகள் சபை, ஆலோசனைச் சபை மற்றும் ஒழுக்காற்றுக் குழுவைத் தாபித்தல்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கெடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும்

வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளுதல் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதப்படக் கூடியவாறாக அவற்றைக் கையாளுதல் அல்லது கையுதிர்த்தல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாகவோ செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(எ) பிணைப்பொறுப்புக்களுடனோ அல்லது பிணைப் பொறுப்புக்களின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின், கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பேரவை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(ஏ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங் களைத் தயாரித்தலும், வரைதலும், ஏற்றுக்கொள் ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், பேச்சுவார்த்தைமூலம் பெறுதலும், வாங்குதலும், விற்பனை செய்தலும், வழங்குதலும் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப்

பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் நிலையான அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும், நிருவகித்தலும்;

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளைப் முடிவுறுத்துதலும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஔ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு விரிவுரைகளையும், கருத்தரங்குகளையும், மாநாடுகளையும் ஒழுங்குபடுத்துதல்;

(க) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அதே குறிக்கோள்களைக் கொண்ட வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ங) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல்; அத்துடன்

(ச) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறெல்லாக் காரியங்களையும் செய்தல்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்*

**7.** *(1)* கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராக விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் உறுப்பாண்மையின் சுருக்கீடு செய்யப்பட்ட பதவிப்பெயர்கள், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்கள் விலகுதல், அவர்களை வெளியேற்றுதல் அல்லது அவர்கள் பதவி விலகுதல் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணம்;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) பரீட்சைகள் சபை, மதியுரைக் குழு மற்றும் ஒழுக்காற்றுக் குழுவின் அமைப்பு, அத்தகைய சபையினதும் குழுக்களினதும் பதவிக்காலம், அத்தகைய சபையினதும் குழுக்களினதும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்; பரீட்சைகள் சபைச் செயலாளரின் பணிகள், பரீட்சகர்கள் குழாத்தின் பெயர்நியமனம்; மற்றும் அத்தகைய சபையும் குழுக்களும் தொடர்பான வேறெவையேனும் கருமங்கள்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமன நியதிநிபந்தனைகளும், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(உ) பேரவையின் அல்லது எவையேனும் உபகுழுக்களின் கூட்டங்களை அழைப்பதற்காகவும் நடாத்துவதற்காகவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(ஊ) பேரவையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவையும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்; அத்துடன்

(ஏ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமைசெய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதியென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

**8.** பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில், உறுப்பினர்களின் பெயரும், முகவரியும் மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்களும் பதியப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்*

**9.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அதன் காரணமாகவும் கொடை, மரணசாதனக் கொடை, நன்கொடை, ஒப்பப் பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்றவகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவுக்குப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழு, சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்*

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய தகுந்த கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, கணக்காய்வாளர் தலைமையதிபதியால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காகத் ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது:-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட

வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

ஆண்டறிக்கை

**11.** (1) ஒவ்வொரு நிதியாண்டுக்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைப் பேரவை தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றையும், அத்தகைய அறிக்கை எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டை அடுத்துப்பின்வரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுமுன்னர் அரசியலமைப்பின் **43** ஆம் அல்லது **44** ஆம் உறுப்புரையின்கீழ் கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக் செயலாளருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணத்தொகைகள் தொடர்பான கணக்குகள் பற்றிய தனிவேறான கூற்றொன்று (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைக் கழகத்திடமிருந்து வருமதியானவையும் அதற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று கொழும்பு மொழித் திறன்கள் மற்றும் நாடகக் கலைச் சங்கத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக் கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமானதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணத்தொகைகளையும் ஆதனத்தையும் பயன்படுத்துதல்*

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணத்தொகைகளும் ஆதனமும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்றவகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை*

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையானது, பேரவையின் இரு உறுப்பினர்களது முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாத

னத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியொருவராகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான பேரவையின் பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்படுவதன் மீது எஞ்சியுள்ள ஆதனம்*

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளும் மற்றும் பொறுப்புக்களும் திருப்தி செய்யப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது, ஆனால், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமளிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின்மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணல்*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.